[30th March 1966

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Recently the hon. Member has given a representation regarding the Primary Health Centre and the Government are considering it.

Thandarai-Vaipur Road

* 534 Q.—SRI A. ARUMUGAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether lands have been acquired for the formation of a road from Thandarai Railway Station to Vaipur in Tiruvannamalai taluk, North Arcot district;

(b) if so, the number of acres so acquired;

(c) whether the compensations have been awarded; and

(d) if not, the reasons therefor?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) முதல் (எ) வரை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகளைச் சேர்ந்த இந்தச் சாலைப் பணி, மாவட்டக் கழகம் நிறைவேற்றுவதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட ஒரு பணியாகும். இது இப்போது, அரசாங்கப் பணியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது. ஜமீன் அகரம் கிராமத்தில் நான்கு பர்லாங்கு நீளமுள்ள சாலையைத்தவிர எஞ்சிய சாலை அமைக்கப்பட்டு விட்டது. ஆனல், நில ஆர்ஜித நடவடிக்கைகள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. இச்சாலை அமைப்பில் ஏறக்குறைய 20 ஏக்கர் நிலம் சம்பந்தப்பட்டுள்ளது. ஜமீன் அகரத்திலுள்ள நிலத்தைத் தவிர மற்ற நிலத்தின் மதிப்பு நிச்சயிக்கப்பட்டு விட்டது. ஜமீன் அகரத்திலுள்ள நிலத்தைக் கட்டாயமாக ஆர்ஜிதம் செய்யவேண்டிவரலாம். நில ஆர்ஜித நடவடிக்கைகள் முடிவு செய்யப்படவில்லையாதலால், இந்த நிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகை இன்னும் வழங்கப்படவில்லை.

தங்கப் பத்திரத் திட்டம்

*535 கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர்:
திரு. செ. மாதவன்:
திரு. கரு. சீமைச்சாமி:
} கனம் முதல்

9-30 a.m. அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தங்கப் பத்திரத்திற்கு இதுவரை எவ்வளவு தங்கம் திரட்டப்பட்டிருக்கிறது, ஜில்லாவாரியாக?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: விவர அறிக்கை ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. செ. மாதவன்: தங்கம் வசூலிக்கும்பொழுது தங்கத்தினுடைய காரட் எத்துணை என்று சரியாக பரிசீலிப்பதற்கு கிராமங்களில் வசதி செய்யப்படவில்லையே? ஆகவே, தங்கம் வசூலிக்கும் பொழுது இது சம்பந்தமாக தவறுகள் ஏற்படலாம். இது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா?

---

a 522–523-ம் பக்கங்களில் ஆருவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.